**THE COURT OF XVI ASSISTANT JUDGE**
**CITY CIVIL COURT, CHENNAI -104**
**OS. NO: 142 /2025**
**DEPOSITION OF DW-1**
**DATE: 08.06.2026**

| | |
|---|---|
| NAME | S.R.Shankar |
| FATHER'S NAME | Raju |

**DW-1 Cross**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் எனக்கு சேர வேண்டிய பணத்தை வாதியிடம் கேட்டதற்கு வாதி அவருக்கு நான் பணம் தர வேண்டும் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் என்ன செய்து வருகிறேன் என்றால் தச்சு வேலை செய்து வருகிறேன். எத்தனை ஆண்டு அனுபவம் உள்ளது என்றால் 35 ஆண்டு அனுபவம் உள்ளது. வாதியை எவ்வாறு பழக்கம் என்றால் ஒரே தெருக்காரர் என்ற முறையிலும் என்னை அழைத்து எனக்கு வேலை கொடுத்த முறையிலும் பழக்கமாகும். மற்றவர் நான் தச்சு வேலை செய்பவர் என்று கூறி அறிந்ததன் பேரில் வாதி எனக்கு வேலை கொடுத்தார். நான் குடியிருந்த தெருவில் வாதி எனக்கு வேலை கொடுக்கவில்லை வேறு இடத்தில் தான் வேலை கொடுத்தார். எனக்கு வேலை கொடுத்த வீட்டின் முகவரி கதவு எண் 45/26, சுப்பிரமணியின் தெரு, சைதாப்பேட்டை, சென்னை என்றால் சரிதான்.என்ன வேலை கொடுத்தார் என்றால் உள் அலங்கார வேலை, சமையல் அறை தச்சு வேலை மற்றும் இதர வேலை கொடுத்தார். வேலை செய்வதற்கு முன்பு அந்த வீட்டை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

2. அதன் பின்னிட்டு இருவரும் பரஸ்பரம் 26.09.2024ல் ஒரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் வா.சா.ஆ.1ன் படி ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி எந்தெந்த வேலைகள் செய்ய வேண்டும் என்ன பொருள் உபயோகிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி நான் Material Contract என்பதை ஏற்படுத்திக்கொண்டேன். அதன்படி Labour மற்றும் Material உள்ளடக்கியது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி அந்த வேலையை எத்தனை நாளில் ஆரம்பித்தேன் என்றால் முன்பணம் கொடுத்து 2 நாளில் ஆரம்பித்தேன். வேலை ஆரம்பித்ததலிருந்து பல்வேறு தேதிகளில் வாதி எனக்கு மொத்தமாக ரூ.4,10,000 Gpay மூலம் கொடுத்தார் என்றால் சரிதான். ஒப்பந்தப்படி வேலைகளை முழுமையாக முடித்துக்கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எப்போது முடித்துக்கொடுத்தேன் என்று எனது எதிர் வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை ஆனால் அக்டோபர் இறுதியில் முடித்தேன்.

3. அக்டோபர் இறுதியில் முடித்ததாக நான் சொல்லுவது பொய் என்றாலும் பணத்தை பெற்றுக்கொண்டு வேலையை முடிக்காமல் இருந்ததால் என் மீது வாதி ஜாபர்கான் பேட்டை காவல் நிலையத்தில் வா.சா.ஆ.2ன் படி புகார் செய்தார் என்றால் இல்லை. அந்த புகாரின் அடிப்படையில், விசாரணையில் மீதி வேலையை நான் முடித்துக்கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு வாதி ரூ.93,000 கொடுப்பார் என்று சமாதானம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் பின்னரும் நான் வேலையை செய்து முடிக்காமல் இருந்ததால் வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் ஆனால் நான் வேலையை முடித்து கொடுத்துவிட்டேன். வா.சா.ஆ.4ன் படி நான் செய்யாத வேலைக்கு உண்டான பணமான ரூ.1,34,390 கொடுக்க வேண்டும் என்று வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால்

சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு ஏதும் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் பதிலறிவிப்பு ஏதும் அனுப்பாமல் வாதி வழக்கு தாக்கல் செய்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட பின்பு தான் பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதிலறிவிப்பிற்கு பின்னிட்டு வாதி எனக்கு பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

SURESH

Digitally signed by SURESH
Date: 2026.06.08 17:29:25 +0530

XVII Assistant Judge
(FAC)XVI Assistant Court
City Civil Court, Chennai-104.